# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 142/2013

பெயர்: **மணி** நாள் : 11.01.2023

வா.சா.1 – 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.1 – மணி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

கடந்த 1946 ம் ஆண்டே வாதியின் தகப்பனார் மற்றும் பாட்டியும் சேர்ந்து இருசாயி அம்மாளுக்கு தாவா சொத்தின் தெற்கு பகுதியை விற்பனை செய்துள்ள நிலையில், தற்போது அந்த நிலம் விலை உயர்ந்த காரணத்தினால் இந்த வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நான் வடக்கு பகுதியிலும், பிரதிவாதிகள் தெற்கு பகுதியிலும் வீடு கட்டி பல காலமாக குடியிருந்து வருகிறோம் என்று சொன்னால், சரியல்ல. எங்களுக்கு பழைய வீடு இருந்தது, அதை இடித்துவிட்டு புதுவீடு கட்டியுள்ளோம். பிரதிவாதிகள் ஒரு வீட்டை சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டினார்கள். மற்றொரு வீட்டை கடந்த ஆண்டுதான் கட்டினார்கள். 2 ம் பிரதிவாதி ஓலை வீடு கட்டி பல காலமாக குடியிருந்து வந்தார், தற்போது புதியதாக ஒரு வீடு கட்டியுள்ளார். அந்த ஓலை வீடு வழக்கு சொத்தின் தெற்குபகுதியில் இருந்து வருகிறது என்றால், சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் பிரித்துக்கொண்டு தனித்தனியே அனுபவித்து வருவதால், நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் பெற்ற கிரைய ஆவணத்தில் உள்ள தட்டச்சு பிழையை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி 3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /மணி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.